செ.வெ.எண்: 375 நாள்: 21.06.2019

**உழவரின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் வட்டாரம், மேல்நிலைப்பட்டி கிராமத்தில் வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் உழவரின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் வேளாண்மை கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் (20.06.2019) அன்று துவக்கி வைத்தார். இதன் பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழக அரசு விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் வகையில் வேளாண்மைத்துறையில் பல்வேறு நவீன வேளாண் தொழில்நுட்பங்களை செயல்படுத்தி வருகிறது. இதுகுறித்து விவசாயிகளிடயே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இன்றையதினம் உழவரின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் வேளாண்மைக் கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வேளாண்மைக் கண்காட்சியில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல்துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் நவீன வேளாண் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. இதேபோன்று வேளாண் அலுவலர்கள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் மூலம் விவசாயிகளுக்கு இலாபகரமான இரட்டிப்பு வருமானம் பெறுவது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் நாட்டில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டத்தினை செயல்படுத்தி உள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.6,000 நிதி உதவி வழங்கப்பட உள்ளது. இத்தொகை நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ரூ.2,000 வீதம் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற உயர் வருவாய் பிரிவினர், நிறுவனத்தின் பெயரில் நிலம் உள்ளவர்கள் உள்ளிட்ட விலக்களிக்கப்பட்ட நபர்கள் தவிர தகுதி உள்ள அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற தங்களது பகுதிகளில் உள்ள கிராம நிர்வாக அலுவலரிடம் விண்ணப்பம் வழங்கி பயன்பெற வேண்டும். மேலும் தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு வேளாண் திட்டங்களை விவசாயிகள் உரிய முறையில் பெற்று வேளாண் உற்பத்தியை பெருக்கி வாழ்வில் முன்னேற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குடுமியான்மலை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சிவசுப்பிரமணியம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். லதா, வேளாண்மை அறிவியல் நிலைய பயிற்சி உதவியாளர் முனைவர்.சிவபாலன், வேளாண் இணை இயக்குநர் சுப்பையா, தோட்டக்கலை துணை இயக்குநர் அருணாசலம், வேளாண் வணிக துணை இயக்குநர் சிவக்குமார், வேளாண் அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**